Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.23**/2021**

Deposition of PW5 Witness for Defence

Defence Court

Name :B.Singarayan Caste:

Father's Name :Balasamy Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 09th March 2023.

**(A1 prouduced. A2 to A5 Present)**

**முதல் விசாரணை-**

நான் சென்னையை அடுத்த திருவேற்காடில் வசித்து வருகிறேன். நான் திருவேற்காடு தேரடி சாலையில் நான் இரண்டு சக்கர வாகன மெக்கானிக் கடை வைத்துள்ளேன். எனது வீடு திருவேற்காடு ஸ்ரீ அபிராமி நகரில் உள்ளது. 12/09/2020 அன்று மாலை 03.30 மணியளவில் நான் சாப்பிடுவதற்காக எனது கடையிலிருந்து எனது வீட்டிற்கு போய் கொண்டிருந்தேன். ஸ்ரீ அபிராமி நகரில் முள் மரங்கள் உள்ள புதர் போன்ற இடத்தில் காவல் ஆய்வாளரும் மற்ற போலீசாரும், பொது மக்களும் அங்கு இருந்தனர். நான் போய் பார்த்தேன். அங்கு ஸ்ரீ அபிராமி நகரில் மளிகை கடை வைத்து நடத்தி வரும் செ சல்வம் என்பவரும் அங்கிருந்தார். காவல் ஆய்வாளர் அந்த இடத்தில் பார்வையிட்டு விவரங்கள் குறித்து கொண்டும் வரைபடம் வரைந்து கொண்டும் இருந்தார்கள். அது சம்பந்தப்பட்ட ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பமிட என்னிடம் போலீசார் கேட்டனர். அதன் பேரில் நான் பார்வை மகசரில் முதலாவதாக கையொப்பமிட்டேன். செல்வம் அதற்கு அடுத்து இரண்டாவதாக கையொப்பமிட்டார். அந்த பார்வை மகசரில் முதலாவதாக இருப்பது எனது கையொப்பம். ( அந்த பார்வை

மகசா் அ.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இது சம்பந்தமாக போலீசாா் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனா்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கடையை 10 வருடமாக வைத்து நடத்தி வருகிறேன். கடையில் நான் ஒருவா் தான். காலையில் 07.30 மணிக்கு திறந்து இரவு 08.30-09.00 மணிக்கு மூடுவது வழக்கம். பொதுவாக மதியம் 02.30-03.00 மணிக்கு மதிய உணவுக்கு செ ன்று மாலை 04.00 மணிக்கு திரும்புவேன். நான் பைக்கில் தான் சென்று வருவேன். எனது கடையிலிருந்து எனது வீட்டிற்கு பிரதான சாலையில் தான் செல்லவேண்டும். நான் கோலடி சாலை வழியாக தான் வீட்டிற்கு சென்று வருவேன். குளக்கரை வழியாக எனது வீட்டிற்கு போய் வருவதில்லை. பிரதான சாலையில் செல்லும் போது குளக்கரையும் முட்புதரும் தெரியும். அன்றைய தினம் கூட்டமாக இருந்ததால் நான் என்னவென்று அறிய சென்றேன். சமாா் 03.30 மணிக்கு நான் சம்பவ இடம் சென்றேன். 03.45 மணியளவில் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அந்த ஆவணத்தில் திசைகள் பற்றி என்னென் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நான் படித்து பாா்த்து தெரிந்து கொள்ளவில்லை. போலீசாா் எனக்கு சொன்னாா்கள். படம் வரைந்த பின்னா் என்னிடம் கையொப்பம் வாங்கினா். நான் போவதற்கு முன்னா் வரைந்து வைத்திருந்த படத்தில் நான் செ ன்ற பின்னா் என்னிடம் போலீசாா் கையொப்பம் வாங்கினாா்களா என்றால் நான் போன பின்னா் அந்த இடத்தில் போலீசாா் வரை படம் வரைந்து அந்த இடத்தில் கையொப்பம் வாங்கினாா்கள். நான் ஒரு கையொப்பம் தான் போட்டேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசாா் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.